[1978 ஏப்ரல் 5

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஸ்கூட்டர் ஒதுக்கீடு

*811 வினு— திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா:

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முன்னுரிமை தந்து ''ஸ்கூட்டர்'' வழங்கும் முறை தற்போது அமுலில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: சட்ட மன்ற உறுப்பினர் களுக்கு ஸ்கூட்டர் வழங்கும் முறை, 1977 ஆம் ஆண்டு ஜுலை மாதத்திலிருந்து இரண்டு காலாண்டுகள் அமுலில் இருந்தது. மைய அரசு 1960 ஆம் ஆண்டு ஸ்கூட்டர்கள் விநியோகம் மற்றும் விற்பனைக் கட்டுப்பாடு ஆணையை 1.1.78-லிருந்து ரத்து செய்துள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, ஸ்கூட்டர் வழங்குவதில், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டு வந்த முறை இப்போது ரத்து செய்யப்பட்டு விட்டதாக அமைச்சர் அவர்கள் கூறினர்கள். இவ்வாறு ரத்து செய்யப்படுவதற்கு முன்பு எத்தனை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஸ்கூட்டர்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறு ஸ்கூட்டர்கள் பெற்றவர்கள் யார், யார் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, 30-9-1977-ஆம் நாளுடன் முடிவடைநத காலாண்டில் பின்வரும் 3 சட்டமன்ற உறுப்பினர்கள், ஒரு பத்திரிகை நிருபர், இரண்டு அரசுப் பணியாளர்கள் இவர்களுக்கு ஸ்கூட்டர்கள் ஒதுக்கப்பட்டன. சங்ககிரி தொகுதி உறுப்பினர் திரு. தனபால், வால்பாறை திரு. தங்கவேலு, நிலக்கோட்டை திரு. பாலுசாமி, அரசு அலுவலர் திரு. விஜயகிருஷ்ணன், திரு. வாசுதேவன், பத்திரிகை நிருபர் திரு. டி. எஸ். சீனிவாசன், இவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. 31-12-1977-ம் நாளுடன் முடிவடையும் காலாண்டில் சட்டமன்ற உறுப்பினர்களான திரு. ஐசரிவேலன், அவர்களுக்கும், கொக்கிரகுளம் திரு. கிருஷ்ணன் அவர்களுக்கும், வந்தவாசி திரு. முனுசாமி அவர்களுக்கும், பாபனசம் திரு. ஆர். வி. சௌந்தரராஜன் அவர்களுக்கும், கும்பகோணம் திரு. எஸ். ஆர். இராதா அவர்களுக்கும், ராசிபுரம் திரு. துரைசாமி அவர்களுக்கும் ஸ்கூட்டர்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

திரு. பொ. முனுசாமி: தலைவர் அவர்களே, இந்த ஸ்கூட்டர் வழங்கப்பட்டால், இதற்குரிய பணத்தை லோன் முறையில் கொடுக்க வேண்டுமா, மாதந்தோறும் எப்படி கோடுக்கவேண்டும் என்பதை அறியவிரும்புகிறேன்.

(விடை இல்லை)

1978 ஏப்ரல் 5]

திரு. துரை முருகன்: சட்டமன்ற உறுப்பினர்கள் யார் யாருக்கு கொடுத்தார்கள் என்பதற்கான பெயர்களை அமைச்சர் அவர்கள் படித்தார்கள். நான் அமைச்சர் அவர்களிடம் தெரிந்து கொள்ள விரும்புவது, ஸ்கூட்டர் வேண்டுமென்று கேட்டுக் கொண்ட அங்கத்தினர்கள் யார் யார், எதன் அடிப்படையில் இதற்கான அனுமதி வழங்கப்படுகிறது? என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: ஸ்கூட்டர் வேண்டும் என்று கேட்டுக்கொண்ட சட்ட மன்ற உறுப்பினர்கள் யார், யார் என்கின்ற விவரம் இப்போது என்னிடம் இல்லை. மொத்தமுள்ள 25 ஸ்கூட்டர்களில் 6 ஸ்கூட்டர்கள் அமைச்சருடைய டிஸ்க்ரீஷனில் கொடுப்பதற்கு அனுமதிக்கப்பட்டது. 30-9-1977 முடிய உள்ள காலாண்டுக்கு கொடுக்கப்பட்ட ஸ்கூட்டர்களில், அரிசன சட்ட மன்ற உறுப்பினர்கள் யார், யார் என்பதை பார்த்து அதன் அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்பட்டது.

திரு, வ. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் போன்ற கிராமப் பகுதியிலிருந்து வந்திருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஸ்கூட்டர் அளிப்பதை விட மோட்டார் பைக் தான் வசதியாக இருக்கும். எங்கள் பகுதிகளில் மோட்டார் கார்கள் போவதற்கு வசதியில்லாமல் புல்லட் மோட்டார் பைக் இருந்தால் அதில் அவசர காலத்தில் மூன்று நான்கு பேர்களை ஏற்றிக் கொண்டு செல்ல முடியும். ஆகவே என்னைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஸ்கூட்டரை விட மோட்டார் பைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்கூட்டர் வழங்கும் உரிமையை மத்திய அரசு ரத்து செய்துவிட்ட காரணத்தால், தமிழக அரசு இப்போது ஸ்கூட்டர் வழங்குவதில்லை. மோட்டார் சைக்கிள் கொடுப்பதுபற்றி தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ஏ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத் தலைவர் அவர்களே, இந்த அரசு எந்த அடிப்படையில், எந்த காரணத்திற்காக ஸ்கூட்டர் வழங்கப்பட்டது என்பது ஒன்று. இரண்டாவது, இப்போது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும், மற்றவர்களுக்கும் ஸ்கூட்டர் வழங்கப்பட்டதாகக் குறிப்பிட்டார்கள். குறிப்பாக, ராதா அவர்களுக்கும் இந்த ஸ்கூட்டர் வழங்கப்பட்டிருக்கிறது. அவருடைய தொகுதி கும்பகோணம். அவர்கள் கோஷன் பிளாக்கிலே வீடு வாங்கியிருக்கிறார். அதிலே தங்கிக் கொண்டிருக்கிறார். அவர் இந்த ஸ்கூட்டரை உபயோகப்படுத்துகின்றாரா? அல்லது வேறு யாராவது அதைப் பயன்படுத்துகின்றார்களா? அப்படி வேறு யாராவது பயன்படுத்தினால், அது ஒழுங்கீனம் இல்லையா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டதாக உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் கூறுவது, நான் சொன்னதை அவர்கள் சரியாக கவனிக்கவில்லை என்று கருதுகிறேன். எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது, இடது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. கிருஷ்ணன் அவர்களுக்கும், காங்கிரஸ் கட்சி என்று கருதுகிறேன், உறுப்பினர் சௌந்திரராஜன் அவர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் ராதா அவர்களுக்கு வழங்கப்பட்ட அந்த ஸ்கூட்டர் தவருகப் பயன்படுத்துகிருர் என்பதற்கு ஆதாரம் இருந்தால், அப்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால், அதைப்பற்றி கவனிக்கப்படும்.

மாண்புமிகு திரு. க. உ.ரொ எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டுகள் இருக்கக்கூடாது என்று விதிமுறை இருக்கிறது. (குறுக்கீடு) Is it not an insinuations I am not able to understand the hon. Member.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் இந்தக் கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லக்கூடாது என்று சொல்லலாம் என்று இருந்தேன். இருந்தாலும் தெரிந்துதான் விட்டேன். இப்படி ஒரு கேள்வி கேட்கும் உறுப்பினர் இந்த அவையிலே இருக்கிருர் என்பது தெரியட்டும்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கூறும்போது ஆளும் கட்சிக்கு மட்டுமில்லாமல், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் தரப்பட்டதாக விவரம் அறிவித்தார்கள். இந்த மன்றத்தில் பிரதான எதிர்க் கட்சியாக இருக்கும் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் யாருக்குமே அளிக்கப்படவில்லை. அவர்கள் யாருமே அப்படி மனு செய்யவில்லையா ? அப்படி செய்திருந்தால், நிராகரிக்கப்பட்டதா? அப்படி நிராகரிக்கப்பட்டிருந்தால் அதற்கான காரணங்கள் யாவை என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே. 9 ஆண்டுகள் இத்தகைய சலுகைகளைப் பெற்றுவந்த பிரதான எதிர்க் கட்சிக்கு வரும் மாதங்களில் அளிக்கலாம் என்று உத்தேசித்திருந்தோம். ஆனல், அதற்குள் மத்திய அரசு இந்தக் கட்டுப்பாட்டை தளர்த்திவிட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்கூட்டர் வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கான உத்திரவு வந்திருக்கிறது. ஆனல், அந்த ஸ்கூட்டர் இன்னும் எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை. இந்த ஸ்கூட்டர் வழங்கும் முறையை

1978 ஏப்ரல் 5]

மத்திய அரசு நிறுத்தியிருக்கிறது. இன்றைக்கு கிவ்ராஜ் மோட்டார்ஸ் இந்த ஸ்கூட்டர்களைத் தருகிறார்கள். என்ன காரணத்தினாலோ மத்திய அரசு நிறுத்திவிட்டார்கள். எனவே இந்த பஜாஜ் கம்பெனியோடு, தமிழக அரசு நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தி, தமிழக அரசிற்கு ஒரு குறிப்பிட்ட அளவு கொடுக்க வேண்டுமென்று இந்த அரசு கேட்க முன்வரவேண்டும். அப்படிக் கேட்கத் தயாரா என்று அறிய விரும்புகிறேன்?

* * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பின்னாலே உள்ள கேள்வியை நான் அனுமதிக்கவில்லை. முதலிலே போட்ட கேள்விக்கு மட்டும், பதில் அளித்தால் போதும்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, பஜாஜ் ஸ்கூட்டர் தாராளமாக மார்க்கெட்டில் கிடைக்கும் என்று மத்திய அரசுக்கு தெரிவித்த காரணத்தாலே, அது தளர்த்தப்பட்டிருக்கிறது. அந்தக் கம்பெனியோடு இந்த அரசு தனியாக உடன்பாடுகொள்ள நடவடிக்கை எடுக்க வாய்ப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி எண். 812 திரு. எஸ். ஜே. இராமசாமி.

(திரு. மு. அம்பிகாபதி. மற்றும் இரு உறுப்பினர்கள் எழுந்திருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து எல்லோரும் உட்காருங்கள். நான் கேள்வி கேட்கலாம் என்று அனுமதித்த பிறகுதான், எழுந்து நின்று கேள்வியைப் போடவேண்டும். ஒவ்வொருவரும் இப்படி துணைக் கேள்வி போட்டுக் கொண்டிருந்தால், எல்லாக் கேள்விகளையும் அனுமதிக்க முடியுமா? அதற்காக, துணைக் கேள்விகள் கேட்க மறுக்கப்படுகின்றது என்று ஒழுங்குப் பிரச்சினை கிளப்பினால் எப்படி? அப்படி கிளப்பினால், அந்த உறுப்பினர்களைக் கூப்பிடாமல் இருப்பதுதான் நலம், நான் கூப்பிடாமல் இருக்கும்போது எழுந்து நிற்கக் கூடாது. எனவே எல்லோரும் அமருங்கள்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.